BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது மார்ச் மாதத்தை கறுப்பர் இன மன நல விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளிப்பு மாதமாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 10, 2021) – மார்ச் 3 ஆம் தேதியன்று, ப்ராம்ப்ட்டன் நகர சபையானது மார்ச் மாதத்தை கறுப்பர் இன மன நல விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளிப்பு மாதமாக பிரகடனம் செய்தது; இது கறுப்பர் இன சமுதாயத்தில் இருக்கும் மனநல சிக்கலுக்கு செவிசாய்க்கும் முகமாக செய்யப்பட்டது.

இந்த முக்கியமான மாதத்தின் ஒரு அங்கமாக, நகரின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிர்ப்பான அமைப்பானது கறுப்பர் இன மன நல விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளிப்பு அமர்வுகளை ஏற்று நடத்தும்.

பங்கேற்பதற்கு நாட்டமுள்ளோர் பின் வரும் ஆன்லைன் அமர்வுகளுக்கு இங்கே பதிவு செய்து கொள்ளலாம்

- இளைஞர் மன நல கருத்தரங்கு: மார்ச் 18 மாலை 4:30 முதல் 6 வரை
- மூத்தகுடிமக்களுக்கான மனநல கருத்தரங்கு: மார்ச் 18 மாலை 6:30 முதல் 7:30 வரை
- பெண்களுக்கான மனநல கருத்தரங்கு: மார்ச் 25 மாலை 6 முதல் 7:30 வரை
- ஆண்களுக்கான மனநல கருத்தரங்கு: மார்ச் 25 மாலை 7:30 முதல் 8:30 வரை
- LGBTQ+ மனநல கருத்தரங்கு: மார்ச் 26 மாலை 6 முதல் 7 வரை
- கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக் கல்விக்கான அமர்வு: மார்ச் 31 காலை 9 முதல் 12 வரை

கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிர்ப்பு மற்றும் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு பற்றிய ப்ராம்ப்ட்டன் நகரின் முனைப்புக்களை இங்கு தெரிந்து கொள்ளுங்கள்: brampton.ca/antiblackracism.

பீல் பகுதியில் கிடைக்கின்ற மன நல சமுதாய ஆதாரவளங்கள் பற்றிய பட்டியலுக்கு, இங்கு க்ளிக் செய்யவும்.

BRAMPTON

Media Release

**ப்ராம்ப்ட்டன் நகரின் சமூக , கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு பற்றி**

ஜூன் 10, 2020 தேதியன்று, நகர சபை கறுப்பர் இன ஆப்பிரிக்க மற்றும் கரீபிய சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்புக்கு ஒப்புதல் அளித்தது. மூத்த ஆலோசகர் கின்னெத் சாப்மேன் தலைமையில், ப்ராம்ப்ட்டனில் புரையோடிப்போன கறுப்பர் மீதான இனவெறியை ஒழிப்பதற்கான செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவதற்கு இந்த பிரிவே பொறுப்பாகிறது. உள்ளூர் சமூக பங்குதாரர்களால் வழிநடத்தப்படும் இதன் பணியானது, ப்ராம்ப்ட்டனின் கறுப்பர் இன சமூகத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டுள்ளது.

மேலும் தெரிந்து கொள்ள அல்லது நகர நிர்வகம் கறுப்பர் இனம் மீதான நிறவெறிக்கு எதிர்ப்பான அமைப்பினை உருவாக்கும்போதே அதில் ஈடுபட நாட்டம் காட்டுவதற்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: economicantiblackracism@brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

"கனடாவில் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கு தீர்வு காண்பதற்காகவும் மற்றும் நமது கறுப்பு வரலாற்று நிகழ்வுகளை நிவர்த்தி செய்வதற்காகவும் ப்ராம்ப்ட்டனின் முதல் மெய்நிகர் மாநாட்டினை பின்னணியாகக் கொண்டு, மார்ச் மாதத்தை கறுப்பர் மனநல விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளித்தல் மாதமாக அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம், மேலும் கறுப்பர் இன சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக இந்த தொடர் மனநல கருத்தரங்குகளை நடத்த உபசரிக்கிறோம். கறுப்பர் இன ஆப்பிரிக்க மற்றும் கரீபிய சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்புடன் சேர்ந்து ப்ராம்ப்ட்டனில் புரையோடிப்போயிருக்கின்ற கறுப்பர் மீதான இனவெறியை ஒழிக்க முக்கியமான பணிகளை செய்து வருகிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கறுப்பர் இன மனநல சுகாதார விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளிப்புக்கான சமூக அமர்வுகள் பல தரப்பினரையும் ஒன்றிணைக்கும், இது கறுப்பர் இனத்தில் மனநல நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதையும், கல்வி மற்றும் பணியிடங்கள் மற்றும் சமூக இன சார்புகளை கல்வி மூலம் எதிர்கொள்வதையும் சிறந்த நிர்வாக நடைமுறைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

" இந்த மாதமானது, கறுப்பர் இன மன நலம் மற்றும் நல்வாழ்வை மையமாகக் கொண்ட நேர்மையான மற்றும் தகவலளிக்கப்பட்ட உரையாடலுக்கு பெருத்த வாய்ப்பை உருவாக்கும். கறுப்பர் இனம் மீதான இனவெறி காரணமாக தீங்கு விளைவிக்கும் சமூக மற்றும் பொருளாதார பாதிப்புகளைப் பற்றி அறிந்து கொள்வோம், மற்றும் இந்தத் தீர்வுக்கு ஒரு பகுதியாக கனடா நாட்டவர்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் அனைவரையும் ஊக்குவிக்கவும் முடியும் என நம்புகிறோம். நகரத்தின் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பானது இந்த மாதம் வரவிருக்கும் அமர்வின் மூலம் குடியிருப்பாளர்களை ஈடுபடுத்த எதிர்பார்க்கிறது "

- *கின்னெத் சாப்மன், முதுநிலை ஆலோசகர், பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter, Facebook,*** மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON

**Media Release**

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca